CoverageReport: TCS IT Wiz – Mega Finals

**Publication:** Theekathir
**Date:** 24/12/2014
**Edition:** Chennai
**Page No:**2
**Headline:**National quiz: Chennai school wins

# தேசிய வினாடி வினா: சென்னை பள்ளி வெற்றி




சென்னை,டிச. 24-

தேசிய அளவில் நடத்தப்பட்ட வினாடி வினாபோட்டியில் சென்னையை சேர்ந்த பள்ளி மாணவர்கள் வெற்றிபெற்றனர்.

டிசிஎஸ்- ஐடி வினாடிவினா போட்டி தேசிய அளவில் பிரபலமானபோட்டியாகும். இந்தியா மட்டுமல்ல ஐக்கிய அரபுகுடியரசுநாடுகளில் இருந்தும் பள்ளிகள் இந்தாண்டு கலந்துகொண்டன. இறுதிப்போட்டியில் இநதியாவில் இருந்து 6 அணிகளும் ஐக்கிய அரபு குடியரசுகளில் இருந்து ஒரு அணியும் கலந்து கொண்டன.

இறுதிப்போட்டியில் சென்னையை சேர்ந்த பி.எஸ். சீனியர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அர்ஜூன் அரவிந்த், எஸ். அபினவ் ஆகியோரைகொண்ட அணி வெற்றி பெற்றது. இந்த போட்டியில் கலந்துகொண்ட பள்ளி மாணவர்கள் கேள்விகளை தயங்காமல் எதிர்கொண்டு மிகவிரைவாக பதில் அளித்த விதம் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியதாக பரிசுகளை வழங்கிப் பேசிய டிசிஎஸ் தலைமை செயல் அதிகாரி என்.சந்திரசேகரன் கூறினார்.